***காலத்தின் முடிவுநேரத்தைக் குறித்து தேவனைத் தவிர ஒருவராலும் அறிய முடியாது. எடுத்துக்கொள்ளப்படுதலும், நியாயத்தீர்ப்பு நாளும், 2011 மே 21 அன்று நிகழும் என்று போதிப்பதற்கு, எவருக்கும் எவ்வாறு தைரியம் உண்டாகிறது? கிறிஸ்துவின் வருகையைக் குறித்த நாளையோ அல்லது நாளிகையையோ ஒரு மனிதராலும் அறிய முடியாது என்று மிகவும் வெளிப்படையாகவே வேதாகமம் கூறவில்லையா?*** **உண்மையாகவே வேதாகமம் அதைப் போதிக்கிறது.**

# ஒரு மனிதனும் நாளையோ அல்லது நாளிகையையோ அறிய முடியாதா?

வேதாகமம் அதை ஏன் போதித்தது என்று வேதாகமமே கூறுகிறது. அப்போஸ்தலர் 1:7ல் புதிய ஏற்பாட்டு சபைக்காலம் ஆரம்பிக்கப்போகிற நேரத்தில் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு பின்வருமாறு போதித்தார்.

**அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல.**

பின்பு, அடுத்த வசனத்தில் இயேசு கீழ்க்கண்டபடி கூறினார்.

**பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.**

சபைக்காலத்தின் போது, முடிவுகாலத்தைக் குறித்து மிகப்பெரியதொரு ஆர்வம் உண்டாயிருந்தது என்று நாம் இவ்வசனங்களிலிருந்து கற்கிறோம். ஆனால், விசுவாசிகள் இக்கேள்வியோடு மனதை அறவே ஈடுபடுத்திக்கொள்ளக் கூடாது. முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை கொண்டு செல்லும் பணியில், தங்களுடைய அனைத்துக் கவனத்தையும் செலுத்தி, அவர்கள் ஈடுபட வேண்டியதாயிருந்தது.

எனவே, எவ்வளவு திறமைமிக்க அல்லது எவ்வளவு கற்றறிந்த ஒரு வேத ஆராய்ச்சியாளராக அல்லது வேதாகம மாணாக்கராக ஒருவர் இருந்த போதிலும் அல்லது எவ்வளவு நேர்த்தியாக அவர்கள் வேதாகமத்தை வாசித்திருந்தாலும் அல்லது உண்மையுடன் கிறிஸ்துவிற்கு ஊழியம் செய்திருந்தாலும் உலகின் முடிவிற்கான கால அட்டவணையை வேதாகமத்திலிருந்து கற்றுக்கொள்வது முடியாததாயிருந்தது. முடிவு காலத்தைக் குறித்து தான் அறிந்திருந்ததாக எவர் கூறிக்கொண்டாலும், அது எப்போதுமே தவறாக இருந்தது.

எவ்வாறாயினும், வேதாகமத்தில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்துகிற ஒரு செய்தி உள்ளது. அது பிரசங்கி 8:5ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்கே, தேவன் பின்வருமாறு அறிவிக்கிறார்.

**கற்பனையைக் கைக்கொள்ளுகிறவன் ஒரு தீங்கையும் அறியான் ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும்.**

என்பவன் வேதாகமத்தின் அதிகார மையத்தில் மிகவும் ஆழ்ந்த நம்பிக்கையை தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட உண்மையானதொரு விசுவாசியாக இருக்கிறான். காலத்தின் துவக்கத்திலிருந்தே உண்மையான விசுவாசிகள் இருந்து வந்துள்ளனர். ஆனால், வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ள பிரகாரம், வரலாற்றின் கால வரிசை உண்மையான விசுவாசிகளின் இருதயத்திற்கு ஒரு போதும் வெளிப்படுத்தப்படவில்லை. எடுத்துக்காட்டாக, பெரும்பாலான சபைக்காலம் முழுவதிலும் சிருஷ்டிப்பு கி.மு 4,004ம் ஆண்டில் நிகழ்ந்தது என்று பொதுவாக நம்பப்பட்டது.

எவ்வாறாயினும், சுமார் 35 வருடங்களுக்கு முன்பு வரலாற்றின் கால வரிசையைக் குறித்த உண்மையான விசுவாசிகளின் புரிந்து கொள்ளுதலைத் திறக்க தேவன் ஆரம்பித்தார். இவ்வாறாக, பழங்காலத்திய நிகழ்ச்சிகள் நம்முடைய நவீன கால நாட்காட்டியுடன் இணைக்கப்படும் பொழுது, சிருஷ்டிப்பு (கி.மு 11013), நோவாவின் காலத்திய ஜலப்பிரளயம் (கி.மு 4990), எகிப்திலிருந்து இஸ்ரவேலர்களின் வெளியேறுதல் (கி.மு 1447), சாலொமோனின் மரணம் (கி.மு 931) போன்ற சரித்திரத்தின் தேதிகளை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

ஆயினும், மிகச் சில வருடங்களுக்கு முன்னர் வரையிலும், வரலாற்றின் முழுமையான கால வரிசையைக் குறித்த துல்லியமான புரிந்து கொள்ளுதல் வேதாகமத்திலிருந்து தேவனால் உண்மையான விசுவாசிகளுக்கு அருளப்பட்டிருக்கவில்லை. இக்காலவரிசை, கால முடிவு வரையிலுமே நீட்டிக்கிறது. உலக முடிவிற்கு வெகு அருகில் நாம் இருக்கும் இக்காலம் வரையிலும் வேதாகமத்தில் முழுவதுமாக மறைக்கப்பட்டிருந்த மிக அதிகமான சத்தியங்கள், இந்த கடந்த பல ஆண்டுகளாக தேவனால் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ***இது எவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்க முடியும்?***

இது வேதாகமத்தில் தெளிவாக தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்க வேண்டும். வேதாகமத்தின் வார்த்தைகளை வாசித்துக்கொண்டோ அல்லது கேட்டுக்கொண்டோ இருக்கும் மனிதனின் ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலைத் திறப்பதற்கு, பரிசுத்த ஆவியானவர் தேவைப்படுகிற ஜீவனுள்ள வார்த்தையாக வேதாகமம் உள்ளது. எனவே, உலகத்தின் முடிவு காலத்திற்கு மிக அருகில் வரையிலும், வேதாகமத்தின் அநேக சத்தியங்களுக்கு நேராய், எந்த ஒருவரின் புரிந்துகொள்ளுதலையும் திறப்பது தேவனுடைய திட்டமாக இராததினால், இப்பொழுது மாத்திரமே மிகவும் முக்கியமான வேதாகம சத்தியங்கள் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன. ***இது நிகழப்போவதாக இருந்தது என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது.***

## மூடி முத்திரிக்கப்பட்டிருந்த புஸ்தகம்.

தானியேலின் புத்தகத்தில் முடிவு கால நிகழ்ச்சிகளைக் குறித்துக் கூற தேவனிடம் அதிகமான காரியங்கள் உள்ளன. இதில் மிக அதிகமானவைகள் தானியேலினால் புரிந்துகொள்ளப்பட்டது. மிகவும் கொடுமையான தகவலாக இது இருந்ததினால், மிகப்பெரிய வேதனை தானியேலின் மேல் வந்தது. எடுத்துக்காட்டாக, தானியேல் 8:27ல் கீழ்க்கண்டபடி நாம் வாசிக்கிறோம்.

**தானியேலாகிய நான் சோர்வடைந்து, சிலநாள் வியாதிப்பட்டிருந்தேன். பின்பு நான் எழுந்திருந்து, ராஜாவின் வேலையைச் செய்து, அந்தத் தரிசனத்தினால் திகைத்துக்கொண்டிருந்தேன். ஒருவரும் அதை அறியவில்லை.**

ஆனால் பின்பு, தானியேல் 12:4 மற்றும் 12:9ல், பின்வருமாறு தேவன் தானியேலிடம் கூறினார்.

**தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப்புஸ்தகத்தை முத்திரைபோடு அப்பொழுது அநேகர் இங்குமங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான். அதற்கு அவன் தானியேலே, போகலாம் இந்த வார்த்தைகள் முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கும்.**

மற்ற வார்த்தைகளில், வேதாகமத்தில் (“புத்தகம்”) பதிவு செய்யப்பட்டுள்ள, ஆனால் முடிவிற்கு அருகில் உலகம் இருக்கும் வரையிலும் தேவனால் வெளிப்படுத்தக் கூடாததாய் இருந்த, முக்கியமான தகவல்கள் அங்கு உள்ளன என்று தேவன் நமக்குக் கூறிக்கொண்டிருக்கிறார்.

வெளிப்படுத்தின விசேஷம் 22:18-19ல், கீழ்க்கண்டவாறு நாம் வாசிக்கிறோம்.

**இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்.**

ஏறக்குறைய கி.பி 95ல், வேதாகமம் முற்றுப்பெற்ற பின்பு, மற்ற எந்த வார்த்தைகளும் வேதாகமத்தோடும் ஒருபோதும் கூட்டப்படக்கூடாது என்று, இந்த வசனங்கள் நமக்கு உத்திரவாதமளிக்கிறது. எனவே எந்த முடிவு கால தகவல்கள் தானியேலுக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், முடிவு காலம் வரையிலும் அறியப்படாததாய் இருந்த அத்தகவல்கள் வேதாகமம் முற்றுப்பெற்றதற்கு முன்னமேயே வேதாகமத்தில் சேர்க்கப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆயினும், உலகம் ஏறக்குறைய தன்னுடைய முடிவிற்கு அருகில் இருக்கும் வரையிலும், இது அறிந்துகொள்ளப்படவியலாத ஒரு வழியில் தேவன் இதை எழுதினார். லூக்கா 24:45ல், **“அப்பொழுது வேத வாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து…”** என்று நாம் வாசிக்கிற பிரகாரம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் இருந்து மாத்திரமே புரிந்து கொள்ளுதல் வருகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். வேதாகமம் ஏன் மிகவும் சிக்கலான புரிந்துகொள்ள கடினமான மொழிநடையில் எழுதப்பட்டுள்ளது என்று இது விளக்குகிறது. மாற்கு 4:34ல், **“உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை.”** என்று நாம் வாசிக்கிற பிரகாரம், இயேசு ஏன் உவமைகளில் பேசினார் என்பதற்கான ஒரு காரணம் இதுவாகும்.

## புத்தகம் திறக்கப்படுகிறது.

ஆனால் பின்பு, வெளிப்படுத்தின விசேஷ.ம் 5:1-9ல், நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்.

**அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன். புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யாரென்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற பலமுள்ள ஒரு தூதனையுங் கண்டேன். வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது, ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது. ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன். அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம் இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான். அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன். அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது. அந்தக்கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார். அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து: தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர். ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,**

மூடி முத்திரிக்கப்பட்டிருந்ததும், கிறிஸ்துவினாலேயே திறக்கப்படுவதுமாயிருந்த ஒரு புத்தகம் இருக்கிறது என்று இவ்வசனங்கள் போதிக்கின்றன. கண்ணோட்டத்தில் இருக்கக்கூடிய ஒரே புத்தகம் தானியேல் 12ல் வேதாகமம் விவரித்துள்ள புத்தகமே ஆகும்.

இப்புத்தகம் ஏழு முத்திரைகளினால் முத்திரிக்கப்பட்டிருந்தது. எனவே, புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த முழுமையான தகவல் புரிந்து கொள்ளுவதற்கு கிடைக்கப்பெறும்

பொருட்டு, இந்த அனைத்து ஏழு முத்திரைகளும் கண்டிப்பாய் நீக்கப்பட வேண்டும். உண்மையில் ஏழாம் முத்திரை நீக்கப்பட்டதைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் 8:1, கீழ்க்கண்டபடி விவரிக்கிறது.

**அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணி நேரமளவும் அமைதல் உண்டாயிற்று.**

## பரலோகத்தில் எப்போது அமைதல் உண்டாயிற்று?

பரலோகத்தில் சுமார் அரை மணிநேர அமைதல் என்பது, 23 வருடங்கள் (மிகச்சரியாக 8,400 நாட்கள்) கொண்ட மிகுந்த உபத்திரவக்காலத்தின் முதற்பகுதியாயிருந்த 2,300 நாட்களை குறிப்பிட்டது என்று பல வருடங்களுக்கு, முன்பு நாம் கற்றிருக்கிறோம். இக்காலம் 1988 மே 21ல் ஆரம்பித்தது. இந்த 2,300 நாட்கள் கொண்ட காலத்தில் சபைகளிலும் உலகமெங்கிலும் மிகச்சிலரே இரட்சிக்கப்பட்டனர். பரலோகத்தில் அமைதல் உண்டாயிற்று என்று வெளிப்படுத்தின விசேஷம் 8:1 கூறுகிறது. 1988 மே 21ல் இருந்தே சூழ்நிலை இதுவாக இருந்து வந்துள்ளது. ஏனெனில், பாவிகள் மனந்திரும்பும் போது பரலோகத்தில் மகிழ்ச்சி உண்டாகிறது. லூக்கா 15:4-32ல், பரலோகத்தில் உள்ள இம்மகிழ்ச்சியைக் குறித்து வேதாகமம் தெரிவிக்கிறது. அமைதல் அல்லாது ஒரு மகிழ்ச்சியாயுள்ளது.

1988 மே 21 சபைக்காலத்தின் கடைசி நாள் என்றும், 23 வருட மிகுந்த உபத்திரவ காலத்தின் முதலாம் நாளாகவும் அது இருந்தது என்றும் நாம் கற்றுக்கொண்டோம். இந்த 23 வருட மிகுந்த உபத்திரவக்காலத்தில், அனைத்து சபைகளையும், அதே நேரத்தில் முழு உலகத்தையும், அதிகாரப்பூர்வமாக ஆட்சி செலுத்தும்படி சாத்தான் தேவனால் அமர்த்தப்பட்டுள்ளான். 8,400 நாட்கள் கொண்ட இக்காலத்தின் முதல் 2,300 நாட்களின் போது, அனைத்து சபைகளிலிருந்தும் அதே சமயத்தில், முழு உலகத்திலிருந்தும் பரிசுத்த ஆவியானவர் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டார். இது பரலோகத்தில் அமைதலை உண்டாக்கிற்று. 23 வருட மிகுந்த உபத்திரவக் காலத்தின் முடிவு வரையிலும், இந்த வருந்தத்தக்க சூழ்நிலை சபைகளில் தொடர வேண்டியதாய் உள்ளது. ஆயினும், 1988 மே 21க்குப் பிறகு (சபைக்காலத்தின் முடிவிற்குப் பிறகு), 2,300 நாட்களின் ஆரம்பத்தில் உலக முழுவதிலும் (ஆனால் "எந்த ஒரு சபையிலும் இல்லாமல்) வேதாகமம் "பின்மாரி" (சகரியா 10:1, யாக்கோபு 5:7) என்று அழைக்கிறதை விளையச் செய்யும்படி ஆவியானவர் மீண்டும் ஊற்றப்பட்டு, பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டுவரும் இரட்சிப்பின் மிகப்பெரியதொரு அறுவடையை தேவன் ஆரம்பித்தார். இந்த இரட்சிப்பு எந்த ஒரு சபையிலும் நிகழ்ந்து கொண்டிருக்கவில்லை. ஆனால், மிகுந்த உபத்திரவக் காலத்தின் முடிவான 2011 மே 21 வரையிலும், சபைகளுக்கு வெளியே இது தொடரும்.

மிகுந்த உபத்திரவக் காலத்தின் ஆரம்பத்தில் (1988 மே 21ல்) ஏழாவதும், கடைசியுமான முத்திரையை, மூடி முத்திரிக்கும்படி தானியேலுக்குக் கட்டளையிடப்பட்டிருந்த இப்புத்தகத்திலிருந்து, கிறிஸ்து நீக்கியதால் இந்த கடந்த வருடங்களில் வேதாகமத்திலிருந்து மிக அதிகமான புதிய சத்தியங்களை, தேவன் நமக்கு வெளிப்படுத்தியுள்ளது ஏன் என்று நம்மால் இப்பொழுது புரிந்துகொள்ள முடிகிறது. முடிவைக் குறித்த துல்லியமான காலத்தையும், தேவனுடைய நியாயத்தீர்ப்புத் திட்டத்தைக் குறித்த அதிகமானவற்றையும் இது உள்ளடக்குகிறது. "காலம்" என்பது "நாளிகைக்கான" ஒரு வேற்றுச்சொல்லாகும். நியாயம் என்பது, "நாள்" என்று அடிக்கடி அழைக்கப்படுகிற நியாயத்தீர்ப்புக் காலத்தைக் குறிக்கிறது. இவ்வாறாக, பிரசங்கி 8:5ல் தீர்க்கதரிசனம் உரைத்த பிரகாரம், காலத்தையும், நியாயத்தையும் அறிந்துகொள்வது "நாளையும்" "நாளிகையையும்" அறிந்து கொள்வதாகும். முழு உலகத்திற்கான தேவனுடைய அன்போடும், இரக்கத்தோடும் இது முழுமையாகப் பொருந்துகிறது. வரப்போகிற அழிவைக் குறித்து நோவா உலகத்தை எச்சரிக்கும் பொருட்டு, தேவன் அவனுக்குத் துல்லியமான தகவலைத் தந்தார் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். இதைப்போலவே, நினிவே பட்டணத்தை அழிக்க தேவன் திட்டமிட்டிருந்த துல்லியமான நாளை, நினிவேயின் ஜனங்களுக்குத் தரும்படி தேவன் யோனாவிற்குக் கட்டளையிட்டார். அதைப்போலவே, தம்முடைய இரக்கத்தினாலும், அன்பினாலும் உண்மையான விசுவாசிகள் உலகத்தை எச்சரிக்கும் பொருட்டு, நியாயத்தீர்ப்பு நாட்களின் முதலாம் நாளான எடுத்துக்கொள்ளப்படுவதைக் குறித்த துல்லியமான நேரத்தை நம்முடைய காலத்திய உண்மையான விசுவாசிகளுக்கு தேவன் தந்துள்ளார். <u>எவ்வளவு கருணையுள்ள, எவ்வளவு கிருபையுள்ள, எவ்வளவு நேசிக்கிற தேவனாக இருக்கிறார்</u>. அதிசயிக்கத்தக்க வகையில் யோனாவின் காலத்தில் நினிவே பட்டணத்தாரை தேவன் இரட்சித்ததைப் போலவே (மத்தேயு 12:41), நம்முடைய காலத்தில் அநேக ஜனங்களை தேவன் இன்னமும் இரட்சித்துக் கொண்டிருக்கிறார்.

## சபைகளில் உள்ளவர்களுக்கு பயபக்தியோடு கூடிய ஒரு எச்சரிக்கை

எடுத்துக்கொள்ளப்படும் சரியான நேரத்தைக் குறித்த ஒரு ஞானமும், நியாயத்தீர்ப்பு நாளைக் குறித்ததொரு புரிந்துகொள்ளுதலும் மிகப்பெருமளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உண்மையான விசுவாசிகளை பரலோகத்திற்கு எடுத்துச்செல்லவும், நியாயத்தீர்ப்பு நாளை ஆரம்பிக்கவுமான, கிறிஸ்துவின் வருகையைக் குறித்த காலத்தை (நாளிகையை), உலக முடிவிற்கு அருகில் உண்மையான விசுவாசிகள் அறிந்துகொள்வார்கள் என்பதை <u>மறுதலிப்பவர்களை</u> அழிப்பதற்கான நியாயத்தீர்ப்பு நாள் வந்து கொண்டிருப்பதைக் குறித்து 1 தெசலோனிக்கேயர் 5:2-3ல், தேவன் எச்சரிக்கிறார். தேவனங்கே பின்வருமாறு நமக்குக் கூறுகிறார்.

**இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை**

**வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும். அவர்கள் தப்பிப்போவதில்லை.**

வெளிப்படுத்தின விசேஷம் 16:15ல், தாமே ஒரு திருடனைப் போன்று வரப்போவதாக (வெளிப்படுத்தின விசேஷம் 3:3ஐயும் பார்க்க) என்று கிறிஸ்து போதிக்கிறார். வெளிப்படையாகவே கிறிஸ்து ஒரு திருடன் அல்ல. அவர் பரிசுத்த தேவனாவார். ஆனால், அவரும் நியாயத்திர்ப்புக் காலமும், ஒரு திருடனைப் போல வரும். ஒரு திருடன் வரும் பொழுது அவன் என்ன செய்கிறான் என்று யோவான் 10:10ல், “**திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்.**” என்று தேவன் விவரிக்கிறார்.

இவ்வாறாக நியாயத்தீர்ப்பு நாளுடன் கிறிஸ்து வரும் பொழுது, அவர் யாருக்காக ஒரு திருடனைப்போல வருகிறாரோ, அவர்களுக்கு ஜீவனை எடுத்துப்போடவும், அழித்துப்போடவும் அவர் வருகிறார்.

## திருடன் இரவில் வருகிறான்

கிறிஸ்து நியாயத்தீர்ப்பு நாளோடு இரவில் வருகிறார். 1தெசலோனிக்கேயர் 5:3ல், “**சமாதானமும், சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறது போல, அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும்: அவர்கள் தப்பிப்போவதில்லை.**” என்று கிறிஸ்து நமக்குக் கூறுகிறார். அழிவு அவர்கள் மீது வருவதினால் இந்த ஜனங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கவில்லை என்று நிச்சயமாகவே நம்மால் அறிந்துகொள்ள முடியும். இரட்சிக்கப்படாமல் இருந்து கொண்டு, ஆவிக்குரிய இருளில் அவர்கள் உள்ளனர். அவர்கள் இரவில் உள்ளனர். “இரவில் வரும் ஒரு திருடனைப்போல” அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு நாள் வந்து கொண்டிருக்கிறது. ஆயினும், தேவனோடு சமாதானமாகவும், அவருடைய பாதுகாப்பில் பத்திரமாகவும், தாங்கள் இருப்பதாக அவர்கள் நம்புகின்றனர். யார் இந்த ஜனங்கள்?

2011 மே 21 அன்று, இன்னமும் எந்த சபையையும் பின்பற்றிக் கொண்டிருக்கும் உலகத்திலுள்ள அனைவரையும், இவ்வசனத்தின் மொழிநடை முழுவதுமாக விவரிக்கிறது. வேதாகமத்திற்கு முரணான இரட்சிப்பைக் குறித்ததொரு திட்டத்தை உள்ளடக்கிய, வேதாகமத்திற்கு உண்மையல்லாத அநேக காரியங்களை சபைகள் போதிப்பதினாலும், பரிசுத்த ஆவியானவர் அனைத்து சபைகளையும் கைவிட்டுள்ளதினாலும், 2011 மே 21 அன்று எந்த சபையையும் இன்னமும் பின்பற்றிக் கொண்டிருப்பவர்கள் இரட்சிக்கப்படவில்லை. ஆயினும், சபைகள் தங்களின் அங்கத்தினர்களுக்கு பின்வருமாறு போதிக்கின்றன.

1..தங்கள் சபைகளின் பாவ அறிக்கை செய்கிற அங்கத்தினர்களாக, கிறிஸ்துவின் பாதுகாப்பில் அவர்கள் பத்திரமாயிருக்கின்றனர்.

2..கிறிஸ்துவின் வருகையைக் குறித்த நாளையோ நாழிகையையோ ஒரு மனிதனும் அறியான். எனவே, இரவில் வரும் ஒரு திருடனைப் போல கிறிஸ்து வருவார் என்பதில் அவர்கள் நிச்சயமாயுள்ளனர்.

இந்த அருமையான ஜனங்கள் தாங்கள் ஆவிக்குரிய இருள் நேரத்தில் இருப்பதையும், கிறிஸ்து வரும் பொழுது அவர்கள் நியாயத்தீர்ப்பு நாளில் அழிக்கப்படுவார்கள் என்று உத்திரவாதமளிக்கும் ஒரு நிலையில் இருப்பதையும், அறவே உணர்ந்து கொள்ளவில்லை. **எவ்வளவு பயங்கரமானது இது!** காலத்தையும் (நாழிகை) நியாயத்தீர்ப்பு நாளையும் குறித்து, அதிகமாக அறிந்து கொண்டவர்கள் உண்மையான விசுவாசிகளேயாகும். ஆவிக்குரிய இருளின் இரவு நேரத்தில் அவர்கள் இருக்கவில்லை.

<u>தேவன் மிகவும், மிகவும் இரக்கமுள்ளவராயும், அன்பானவராயும் இருக்கிறார் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். தாழ்மையுடன் கதறுகிற தேவனிடத்தில் மன்றாடிக் கெஞ்சுகிற எந்த ஒருவருக்கும், தானும் கூட இரட்சிக்கப்படலாம் என்ற நம்பிக்கையுண்டு.</u>

- 1974ல் முதலாவதாக அச்சிடப்பட்ட <u>ஆதாம் எப்பொழுது</u>? என்ற புத்தகத்தைப் பார்க்கவும். Family Radio, Oakland, CA 94621, USA என்ற முகவரிக்கு தொடர்பு கொள்வதின் மூலமாக, எவ்வித செலவுமின்றி, ஆங்கிலப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது <u>www.familyradio.com</u> என்ற இணைய தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்வதின் மூலமாகவும் நீங்கள் இதைப் பெற்றுக்கொள்ளலாம்.

உலகத்தின் முடிவைக் குறித்த விவரங்களை மேலும் அதிகமதிகமாகக் கற்றுக்கொள்ள கீழ்க்கண்ட இலவச புத்தகங்களை வேண்டி பேமிலி ரேடியோவிற்கு எழுத அல்லது எங்களது இணைய தளத்திலுள்ள புத்தகங்களைப் பார்வையிட, நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். அவைகள் ஆங்கிலத்திலும் ஸ்பானிஷ், பிரஞ்சு, சீனம், தமிழ் மற்றும் அநேக மொழிகளிலும் கிடைக்கப்பெறுகின்றன.

**தேவன் என்னை இரட்சிப்பார் என நான் நம்புகிறேன்.**
**நாம் ஏறக்குறைய அங்கேயே உள்ளோம்!**
**தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.**